**கவனிக்க.**-2024.03.15 ஆந் திகதிய 2376 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2377 - 2024 මාර්තු මස 22 වැනි සිකුරාදා - 2024.03.22

2377 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | 40 |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 42 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024,ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மாச்சு மாதம் 28ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


39 - B 082552- 353 (2024/03)

# நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

## அறிவித்தல்

*107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்*

*கண்டி மேல் நீதிமன்ற வலயத்திற்குள் சிங்கள மொழி மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திருமதி ஆர்.எஸ்.கே. சந்திரகாந்தி அவர்கள் 2023.03.01 ஆந் திகதி முதல் பதவி விலகியதை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

எம்.எல். கம்மம்பில,
மேலதிக செயலாளர் (உள்ளக).

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் ,
*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,*
கொழும்பு,
*2024, பெப்புருவரி 16.*

*03-381*

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

## அறிவித்தல்

*107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்*

*பாணந்துறை மேல் நீதிமன்ற வலயத்திற்குள் சிங்கள மொழி மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு.தொன் குலசிறி விஜேசூரிய அவர்கள் 2023.05.15 ஆந் திகதி முதல் பதவி விலகியதை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

கே.டீ.என். ரஞ்சித் அசோக,
செயலாளர்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் ,
*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,*
கொழும்பு,
*2023, திசெம்பர் 29.*

*03-382*

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

## அறிவித்தல்

*107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்*

*கம்பஹா மேல் நீதிமன்ற வலயத்திற்குள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு. கருணாநாயக்க முதியன்சேலாகே ஹரிச்சந்திர கருணாநாயக்க அவர்கள் 2023.01.22 ஆந் திகதி முதல் பதவி விலகியதை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

கே.டீ.என். ரஞ்சித் அசோக,
செயலாளர்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் ,
*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,*
கொழும்பு,
*2023, திசெம்பர் 29.*

*03-383*

## பதிவாளர் நாயகம் திணைக்களம்
## அறிவித்தல்

107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்

இரத்தினபுரி மேல் நீதிமன்ற வலயத்திற்குள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு. பராக்கிரம ஜயேந்திரனாதசுபவிக்ரமஅவர்கள் 2023.06.17 ஆந்திகதி முதல்பதவிவிலகியதை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

கே.டீ.என். ரஞ்சித் அசோக,
செயலாளர்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் ,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
கொழும்பு,
2023, திசெம்பர் 29.

03-384

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்
## அறிவித்தல்

107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்

கேகாலை மேல் நீதிமன்ற வலயத்திற்குள் சிங்கள மொழி மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு. திஸாநாயக்க அப்புஹாமிலாகே சிறிசேன அவர்கள் 2023.04.01 ஆந் திகதி முதல் பதவி விலகியதை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

கே.டீ.என். ரஞ்சித் அசோக,
செயலாளர்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் ,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
கொழும்பு,
2023, திசெம்பர் 29.

03-385

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்
## அறிவித்தல்

107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்

கொழும்பு மேல் நீதிமன்ற வலயத்திற்குள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலம் நொத்தாரிசு பதவியில் கடமையாற்றிய திரு. கர்வின் பெஸ்டியன்ஸ் ஹத்முனே லியனகே அவர்கள் 2022.03.01 ஆந் திகதி முதல் பதவி விலகியதை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அனுமதித்துள்ளார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

கே.டீ.என். ரஞ்சித் அசோக,
செயலாளர்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
கொழும்பு,
2023, திசெம்பர் 29.

03-386

# நானாவித அறிவித்தல்கள்

## கம்பனி கலைப்பு பற்றிய அறிவித்தல்

### கொழும்பில் நடைபெற்ற மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்
### ( அதன் சிவில்/வர்த்தக நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல்)

வழக்கு இல.: CHC 82/ 2019 CO
பெறுமதி: ரூ.1,000, 000
நடைமுறை: சுருக்க

கொழும்பு 07, தர்மபால மாவத்தை, இல. 245 இல் அமைந்துள்ள டீ.கே. எஸ். பைனான்ஸ் லிமிடெட் (PB 3793) தொடர்பான விடயத்தில்,

டி.கே.எஸ்.பைனான்ஸ் லிமிடெட், 245, தர்மபால மாவத்தை, கொழும்பு 7.

மனுதாரர்

கொழும்பு -07, தர்மபால மாவத்தை, இல. 245 இல் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள டீ.கே. எஸ். பைனான்ஸ் லிமிடெட் (PB 3793) நிறுவனத்தை கலைப்பதற்கு 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதிய மனு, சிவில் நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தி கொழும்பில் நடைபெற்ற மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த மனு தொடர்பிலான விசாரணைக்கு 2024 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும், குறித்த மனு தொடர்பில் கட்டளையொன்றை ஆக்குவது சார்பாக அல்லது எதிராக கருத்து தெரிவிக்க எண்ணியுள்ள அந்த நிறுவனத்தின் எந்தவொரு கடனளிப்பவர் அல்லது ஒரு தனிப்பட்ட முறையில் அல்லது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாக ஆஜராகி கருத்து தெரிவிக்க முடியும் எனவும், மனுவின் பிரதியை கீழ் கையொப்பமிடப்பட்ட சட்டத்தரணியால் வேண்டப்படுமிடத்து பரிந்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி எந்தவொரு கடனளிப்பவருக்கும் அல்லது பங்களிப்பவருக்கும் பெற்றுக்கொள்ளலாம் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சட்டத்தரணி இந்துல ஹேவகே,
இலக்கம் 120, சந்தானம்பிட்டிய வீதி,
கங்கொடவில,
நுகேகொட.

**குறிப்பு**: இம்மனு விசாரணைக்கு எடுக்கப்படும்போது ஆஜராக விரும்பும் எந்தவொரு நபரும் மேற்கூறிய சட்டத்தரணி திரு. இந்துல ஹேவகேவுக்கு அவ்வாறு செய்வதற்கான தனது கருத்தை எழுத்து மூலம் தெரிவித்து கையளித்தல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அறிவித்தல் கொடுக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும் ஒரு நிறுவனமாக இருந்தால், நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி என்பன அறிவித்தலில் குறிப்பிடப்பட வேண்டும் மற்றும் நபர் அல்லது நிறுவனம் அவரது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டும் என்பதோடு, 2024. 05.29 ஆந் திகதி மாலை 6.00 மணிக்கு முன் கையளிக்கப்பட வேண்டும். பதிவுத் தபால் மூலம் அனுப்புவதாக இருந்தால் மேற்குறித்த சட்டத்தரணியின் முகவரிக்கு மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு போதிய கால அவகாசத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

03- 359

---

### திறன் அபிவிருத்தி மற்றும் பயிற்சிக்கான சர்வதேச நிறுவனத்தைக் ( எஸ்.டீ.ரீ. ஐ. கெம்பஸ் ) கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ஜே.சீ. அலவத்துவல ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "திறன் அபிவிருத்தி மற்றும் பயிற்சிக்கான சர்வதேச நிறுவனத்தைக் ( எஸ்.டீ.ரீ.ஐ. கெம்பஸ்) கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் " எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த நிறுவனத்தைக் கூட்டிணைப்பதே இச் சட்டமூலத்தின் நோக்கமாகும்:

(அ) வெளிநாட்டு பல்கலைக்கழகங்களினால் முன்னெடுக்கப்படும் பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா பாடநெறிகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவ மாணவியர்களுக்கு இலங்கையினுள் கற்பதற்காக ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்;

(ஆ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தைக்குப் பொருத்தமான முறையில் முறையான செயல் முறைகளின் கீழ் வாழ்க்கைத் தொழில்சார் பயிற்சி பாடநெறிகளை முன்னெடுத்தல்;

(இ) இலங்கையினுள் ஏற்றுமதி உற்பத்திகள் மற்றும் இறக்குமதி உற்பத்திகளுக்கான மாற்றீடுகளின் மீது இளைஞர்கள் மற்றும் யுவதிகளை தொழில் முயற்சியாளர்களாக வலுப்படுத்துவதற்கான தொழில் பயிற்சி பாடநெறிகளை முன்னெடுத்தலும்,

பிறவும்.

ஜே.சீ. அலவத்துவல ,
குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்.

03- 350

---

## கொழும்பு மொழித் திறன்கள் மற்றும் நாடகக் கலைச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "கொழும்பு மொழித்திறன்கள் மற்றும் நாடகக் கலைச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த நிறுவனத்தினை (சங்கம்) கூட்டிணைப்பதே சட்டமூலத்தின் நோக்கமாகும்:

1. விண்ணப்பதாரர்களின் தேவைகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஆங்கிலம் மற்றும் நாடகக் கலைகளில் வாய்மொழி மற்றும் எழுத்துத் தொடர்பாடலில் பலவகையான பாடத்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் பரீட்சைகளை நடாத்துதல்;

2. ஆங்கிலம் பேச்சு , நாடகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பாடங்களுக்கான ஆசிரியர்களிடையே நட்பு மற்றும் புரிதலின் நெருக்கமான பிணைப்பை வளர்ப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும்; மற்றும்,

3. வழக்கமான ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளை நடாத்துதல், தனிப்பட்ட மற்றும் தொழில்முறை தகவல் தொடர்பு திறன்களை வளர்ப்பதற்கான கற்கைகளை மேற்கொள்ளல்;

முதலியன.

சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,
மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற
உறுப்பினர்.

03- 354

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.